டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.07.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 020 - Madurai | Online Edition

# ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை திட்டமிடல் ஆணையத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது



புது தில்லி, ஜூலை 10

ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை, திட்டமிடல் ஆணையத்தின் 7-வது நிர்வாகக் குழுக் கூட்டம் மத்திய சுற்றுச் சூழல், வனம், பருவ-நிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமையில் கோயம்புத்தூரில் நடைபெற்றது.

நாடு முழுவதும் ஈடுசெய் காடு வளர்ப்பை வலுப்படுத்துதல், வனப் பாதுகாப்பு, வனவிலங்குகள் பாதுகாப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட புதிய யோசனைகள், முன்முயற்சிகள் பற்றியும் ஆணையத்தின் ஒட்டுமொத்த செயல்பாடு குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றத்துறை இணையமைச்சர் கீர்த்திவர்தன் சிங், அமைச்சக மூத்த அதிகாரிகள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

2025-26-ல் ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை, திட்டமிடல் ஆணையம் பெற்ற நிதிநிலை, ஒப்புதல், செய்யப்பட்ட மாற்றம் போன்றவற்றுடன் மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் செயல்படுத்திய தற்போதைய ஒட்டுமொத்த மதிப்பு மற்றும் ஈடுசெய் காடு வளர்ப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும், இந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப் பட்டது.

6 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் மாங்ரோவ் காடுகள் வளர்ப்பு, மீட்புக்காக ரூ.88.40 கோடி விடுவிக்கப் பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய நிர்வாகக் குழு, இந்தத் திட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு (2029 வரை) நீடிப்பதற்கும் கூடுதலாக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்வதற்கும் ஒப்புதல் அளித்தது.

நகர்ப்புற வனவளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.571.50 கோடி விடுவித்து, 652 நகர்ப்புற வனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பசுமை பரப்பு விரிவாக்கத்திற்காக மரக்கன்று நடும் திட்டத்தை ஊக்கப்படுத்த இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்வி சபைக்கு ரூ.7.28 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சிகளை அதிகப்படுத்த மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும் நிர்வாகக் குழு ஊக்கப்படுத்தியது.

நாடு முழுவதும் சுமார் 15,000 புனித மரங்களைக் கொண்ட வனங்களைப் பாதுகாக்கவும், மீட்கவும் ரூ.3,000 கோடி தொகு நிதியத்துடன் 5 ஆண்டுகாலத்திற்கான (2026-27 முதல் 2030-31 வரை) புனித வன பாதுகாப்புத் திட்டத்திற்கு நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்தது.

ஆற்றுப் பகுதி டால்ஃபின்கள் பாதுகாப்பு, மீட்புத் திட்ட ஆய்வுகள், பனிச்சிறுத்தை 2-ம் கட்ட திட்டம் (2-ம் சுற்று கணக்கெடுப்பு உட்பட), இந்திய காண்டாமிருகங்கள் பாதுகாப்புத் திட்டம் உட்பட தேசிய ஆணையத்தின் நிர்வாகக் குழு பரிந்துரை செய்த புதிய வனவிலங்கு, வனப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்தது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழகத்தில் ஜூலை 16 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூலை 10

தமிழகத்தில் ஜூலை 16-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை உள்ளிட்ட பகுதிகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வட தமிழக கடலோரப் பகுதிகளை ஒட்டி, ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. தெலங்கானாவிலிருந்து கர்நாடக கடலோரப் பகுதிக்கு அப்பால் உள்ள மத்திய கிழக்கு அரபிக்கடல் வரை மற்றொரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏனைய தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 12 முதல் 14-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக் கூடும்.

15-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 16-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட தமிழக கடலோரப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் 12 முதல் 14-ம் தேதி வரை ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர்ந்தும், இதர பகுதிகளில் இயல்பை ஒட்டியும் இருக்கக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

**சுவை மற்றும் பல்வகைமை**

● இட்லி, தோசை, அப்பம், இடியாப்பம், உப்புமா, பொங்கல், ரொட்டி, பரோட்டா என பலவகை உணவுகளுடன் பொருந்தும்

● **சுவையில் மாறுபாடுகள் :** காரமானது, புளிப்பானது, உமாமி சுவை, இனிப்பு–கார கலவை

நெருப்பில்லா சட்னிகள் தமிழகத்தின் பாரம்பரிய சமையல் அறிவின் முக்கியப் பகுதியாகும். மதுரை தண்ணிச் சட்னி, தேங்காய் சட்னி, பச்சை மாங்காய் சட்னி, நிலக்கடலை சட்னி, கொத்தமல்லி–புதினா சட்னி உள்ளிட்ட பல்வேறு வகைகள், நவீன வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு எளிமையாகவும் விரைவாகவும் தயாரிக்கப்படுகின்றன. இவை ஊட்டச்சத்தைப் பாதுகாப்பதுடன், நேரம், எரிசக்தி, பணம் ஆகியவற்றையும் மிச்சப்படுத்துகின்றன.

எளிமையான மிக்சி அல்லது சில உபகரணங்கள் மூலம், தமிழகத்தின் சுவை மரபை நெருப்பில்லாமலேயே அனுபவிக்கும் இந்தப் பழக்கம், இன்றைய நகர்ப்புற வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**முற்றும்.**

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்



# திரவ உயிர் உரங்களை பயன்படுத்தி ரசாயன உரங்களை குறைத்து மண்வளத்தை காத்து அதிக மகசூல் பெற வேளாண்மை துறை அறிவுரை



அரியலூர், ஜூலை 10

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் மூலம் ஜெயங்கொண்டத்தில், திரவ உயிர் உரம் உற்பத்தி மையம், வேளாண்மை இணை இயக்குனர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இந்த மையத்தில் அனைத்து வகையான உயிர் திரவ உரங்களை உற்பத்தி செய்து, அரியலூர் மாவட்ட வட்டார அளவில் உள்ள வேளாண்மை கிடங்குகளிலும் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் விவசாயிகள் பயன்படும் வகையில் அனுப்பப்படுகிறது. இன்று திரவ உயிர் உரம் உற்பத்தி மையத்தை, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) மகேந்திரவர்மன் மற்றும் வேளாண்மை அலுவலர் முருகன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது, உயிர் உரங்கள் என்பது பயிர்களுக்கு நன்மை செய்யும் நுண்ணுயிரிகளை கொண்ட உயிரியல் ரீதியாக செயல்படும். இவை பயிர்களுக்கு கிட்ட நிலையிலுள்ள பேருட்ட இணைவூட்ட மற்றும் நுண்ணுயூட்டசத்துகளை எளிதில் கிடைக்கும் நிலைக்கு மாற்றி மண்ணின் வளத்தை அதிகரிக்கிறது. அசோஸ்பைரில்லம் உயிர் உரமானது, காற்றில் உள்ள தழைச்சத்தினை நேரடியாக பயிர்களுக்கு வழங்குகிறது. பயிர் வளர்ச்சியை தூண்டும் ஹார்மோன்கள் உயிர் உரங்களின் செயல்பாட்டின் மூலம் கிடைக்கிறது. பயிர்களை வேர் பகுதியில் பிற நன்மை செய்யும் நுண்ணுயிர் களை பெருக்கத்தினை ஊக்குவிக்கிறது. மண்ணில் மக்கின் அளவை சீராக பராமரிப்பதால், மண்ணின் நயம் மண்ணின் வளம் பாதுகாக்கிறது.

ஏற்கனவே ஒன்றி வாழக்கூடியதால் சுற்றுப்புற மாசுபாட்டினை கட்டுப்படுத்த உதவுகிறது. பாஸ்போபாக்டீரியா என்ற உயிர் மண்ணில் கட்டுண்டு கிட்டா நிலை நிலையில் உள்ள மணிசத்தை மண்ணில் நிலை நிறுத்தி பயிர்களுக்கு அளிக்கிறது. குறிப்பாக பயிர் வளர்ச்சி ஊகிகள் சுரந்து வேர் வளர்ச்சி, பருவ–நிலை மாறுதலுக்கான பயிரின் தாங்கு திறன், விதை உற்பத்தி அதிக தூர் விடுதல் மற்றும் பயிர் நீர் பாசன பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கிறது.

பொட்டாஷ் பாக்ரியாவை பயன்படுத்துவதால் பயிர்களின் வேர் அமைப்பை வலுப்படுத்தி ஊட்டச்சத்து மற்றும் நீர் உறிஞ்சும் திறனை மேம்படுத்துகிறது. பூச்சி மற்றும் நோய் தொற்றுக்கு எதிராக போராடும் ஆற்றல்களை செடிகளுக்கு வழங்குகிறது. பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்களின் வடிவம், அளவு, நிறம், சுவை மேம்படுத்த வைக்கிறது. துத்தநாக பாக்டீரியா, இந்த திரவ உயிர் உரம் மண்ணில் உள்ள துத்தநாகசத்தை அதிகப் படுத்தி மண்ணின் வளத்தை அதிகரிப்பதுடன் பயிருக்கு பயன் படுத்தப்படும் துத்தநாகத்தின் அளவை குறைக்கலாம். இந்த உயிர் வருமானது துத்தநாகசத்தை அதிகப்படுத்தும் திறன் கொண்டது.

திரவ உயிர் உரங்களை பயன்படுத்துவதால், தேவையான ரசாயன உரங்களை தேவையை வெகுவாக குறைத்து விவசாய உற்பத்தி செலவை கட்டுப்படுத்துகிறது. இதை விதை நேர்த்தியாக 100 மில்லி திரவ உயிர் உரத்தை ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளை ஆரிய கஞ்சிகளை பயன் படுத்தி, விதை நேர்த்தி செய்து, உலர வைத்து பின்னர் விதைக்கலாம். நாற்று நடும் போது 100 மில்லி திரவ உயிர் உரத்தை 16 லிட்டர் நீரில் கலந்து நாற்றுகளின் வேர்கள் நனையுமாறு 30 நிமிடங்கள் வைத்து பின்னர் நடவு செய்ய லாம். நேரடி வயலில் ஒரு ஏக்கருக்கு 200 மில்லி திரவ உரம் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைப்புக்கு முன்னர் பயன்படுத்தலாம். நீர் வழியாக ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி திரவ உரத்தை விதைத்த 15, 30 மற்றும் 45வது நாட்களில் பயன்படுத்தலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் வைத்திலிங்கத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டு பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், தர கட்டுப்பாட்டு பணி களை எடுத்துரைத்து வாழ்த்து பெற்றார்.




# வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கை கூட்டம் (Pre Budget Meeting)



வேலூர், ஜூலை 10

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் நிதிநிலை அறிக்கை தொடர்பான தயாரிப்பு கூட்டத்தில் R.வினோத், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், முனைவர் P.சங்கர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், மற்றும் P.S. லீலா அலெக்ஸ், மாவட்ட ஆட்சியர், வேலூர், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறை சார்பாக அமைக்கப்பட்ட பொருட்காட்சியை பார்வையிட்டனர்.

இப்பொருட்காட்சியில் விதைப்பரிசோதனை நிலைய செயல்பாடுகளான விதை மாதிரி பெறுதல், குறியீட்டு எண் வழங்குதல், புறத்தூய்மை கணக்கிடுதல், விதைப்பு செய்தல், முளைப்புத்திறன் கணக்கிடுதல், விதை மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளை வெளியிடுதல் போன்றவை குறித்து காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் விவரித்து கூறினார். இதில் காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையத்திற்கான ஈஙயடு சான்று ஆய்வு செய்யப்பட்டது.

முளைப்புத்திறன் பரிசோதனை முறைகளான சுருள்தாள் முறை, மடிப்புத்தாள் முறை, தாள்களின் மேல் விதைப்பு முறை, மணல் மேல் விதைப்பு முறை பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அநேக விவசாயிகள் பொருட்காட்சியை பார்வையிட்டனர். அவர்களின் கேள்விகளுக்கு விளக்கமாக பதிலளிக்கப்பட்டது. விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் தரத்தை அறிந்து விதைப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டது. விதை பரிசோதனை நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் எந்தெந்த மாவட்டங்களில் எங்கு இயங்குகிறது என்பதை பற்றிய தகவல்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு விதை மாதிரியின் தரத்தை கண்டறிய ரூ.80/- வசூலிக்கப்படுவதாகவும், விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையினை நேரிலோ அல்லது கூரியர் மூலமாகவோ அனுப்பி விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது. இப்பொருட்காட்சியில் விதை பரிசோதனை அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# வரப்பு மற்றும் எல்லையில் மரப்பயிர் சாகுபடி பயிற்சி

சேலம், ஜூலை 10

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை உழவர் நலத்துறை அட்மா திட்டத்தின் கீழ் கடம்பூர் கிராமத்தில் வனத்துறை நாற்று பாரமரிப்பு அலுவலகத்தில் வரப்பு மற்றும் எல்லை மரப்பயிர் சாகுபடி பயிற்சி நடைபெற்றது.



வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேலன், வரவேற்று விவசாய அடையாள எண் முக்கியதுவம் பற்றியும் உழவன் செயலி நன்மைகள் பற்றி எடுத்துரைத்தார். சிறப்பு அழைப்பாளர் வெங்கடேசன் வனவர் கலந்து கொண்டு பசுமை தமிழ்நாடு இயக்கம் காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர் பண்மை பாதுகாப்பு பசுமையாக்கல் திட்டத்தின்கீழ் மரபயிர் சாகுபடி தொழில்நுட்பம் பற்றியும் தேக்கு மகோகனி, சந்தனம் வேம்பு போன்ற மரங்களின் சந்தை மதிப்பு பற்றியும் எடுத்து கூறினார். விவசாயிகள் நிலங்களில் இலவச மரகன்று நடவு முறைகளும் எடுத்துரைத்தார். மேலும் வணவிலங்கு சேதம் நஷ்ட ஈடு போன்றவற்றையும் எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் தங்கவேல் நடப்பு மானிய திட்டங்களை எடுத்து கூறினார். இதில் 40க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள், சங்கர் பிரபா ஆகியோர் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஜூலை 10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 14.07.26 மற்றும் 15.07.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- **முருங்கை** – முருங்கை பொடி, பருப்பு பொடி, சாம்பார் பொடி, பிஸ்கட், அடை மிக்ஸ், ஊறுகாயட, நூடுல்ஸ்
- **காளான்** – காளான் பொடி, சூப் மிக்ஸ், பிஸ்கட், ஊறுகாய், பிழிதல் தொழில்நுட்பம்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.




# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயத்தில் வெற்றி பெற பண்ணைப் பதிவேடுகள் பராமரிப்பு அவசியம்?



உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது‘ என்ற அந்த நாள் பழமொழியையே நாம் சொல்லிக் கொண்டிருப்பது, விவசாயத்தில் வெற்றி பெற உதவாது.

**விவசாயத்தில் பண்ணை பதிவேடுகள் பாரமரித்தல் தேவையா?**

விவசாயத்தை நாம் ஒரு தொழிலாக பார்க்க வேண்டும். எந்த ஒரு தொழில் முறை நிர்வாகத்தில் உரிய பதிவேடுகள் பாரமரிப்பது போல பண்ணையில் பராமரித்தால் தான் நமக்கு லாபம் நஷ்டம் தெரிய வரும். இது பண்ணையில் (FARM) நடைபெறும் தினசரி செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கும், செலவுகளைத் துல்லியமாக கணக்கிட்டு லாபத்தை அதிகரிக்க உதவும். தற்போது ஆர்கானிக் சான்றிதழ் பெற வேண்டு மானாலும் கூட முறையான பதிவேடுகள் பராமரிக்க வேண்டும். அப்போது தான் (SCOPE CERFICATE) பெற முடியும்.

**என்ன என்ன பதிவேடுகள் பராமரிக்க வேண்டும்?**

1) இருப்பு பதிவேடு
2) கூலியாட்கள் வருகை பதிவேடு
3) தினசரி வரவு / செலவு பதிவேடு
4) விற்பனை பதிவேடு
5) சாகுபடி விவர குறிப்புகள் பதிவேடு.

முறையான பதிவேடுகள் இருந்தால் மட்டுமே விவசாயிகள் தங்களுடைய பண்ணை நிர்வாகத்தில் சரியான தெளிவான முடிவுகளை எடுக்க முடியும். ஒரு பண்ணையின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கு இந்த பதிவேடுகள் அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றன.

**1) நிதி சார்ந்த பதிவேடுகள்**

பண்ணையின் பொருளாதார நிலையை அறிய நிதிப் பதிவேடுகள் மிக முக்கியமானவை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பண்ணைக்கு கிடைத்த மொத்த வருமானத்திலிருந்து மொத்த செலவுகளைக் கழித்தால் கிடைப்பதே லாபமாகும்.

**2) உற்பத்தி மற்றும் இடுபொருட்கள் பதிவேடு**

பண்ணையில் சாகுபடிக்கான விதை முதல் இடுபொருள் விபரங்களை பதிவு செய்ய பயன்படுகிறது. இது தேவையில்லாத செலவுகளைக் கட்டுப்படுத்தவும், இருப்பைக் கண்காணிக்கவும் உதவுகின்றன.

**3) கூலியாட்கள் வருகை பதிவேடு**

இது பண்ணையில் ஒவ்வொரு நாளும் என்ன என்ன வேலைக்கு (களை, பூச்சி மருந்து) எத்தனை ஆட்கள் வந்து உள்ளனர்? என்பதையும் கூலி விபரங்கள் மற்றும் வேலைத் திறனை அறிய இந்த பதிவேடு உதவும்.

**பதிவேடுகளைப் பாதுகாத்தல்?**

பதிவேடுகளை உருவாக்குவது எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் அவற்றை முறையாக வைத்து பாதுகாப்பது தான். இந்த பதிவேடுகள் சேதமடையாமலும் காணாமல் போகாமலும் பாதுகாப்பான இடத்தில் வைத்து பாதுகாக்க வேண்டும். சரியான முறையில் பதிவேடுகள் (REGISTERS) முறையாக பாரமரிப்பதன் மூலமாக ஒரு விவசாயி தனது பண்ணையை வெற்றிகரமான பண்ணையாக மாற்ற முடியும்.

ஆற்றில் போட்டாலும் அளந்து போடவேண்டும் என்கிற அந்த நாள் பழமொழியை உள்வாங்க வேண்டும்.

விவசாயத்தை ஒரு வணிகமாக எண்ணவேண்டும். கண்ட கண்ட பயிர்களை சாகுபடி செய்யாமல் சந்தையின் தேவைக்கேற்ப பயிர் சாகுபடிக்கு மாறவேண்டும். ஒரே பயிரை சாகுபடி செய்யாமல் பல பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள வேண்டும். ஒன்றில் நஷ்டம் வந்தாலும் மற்றவை கை கொடுக்கும். ஓடிக் கொண்ட இருக்கிற நதியில் போடுவதைக்கூட அளந்து போடச் சொல்லியிருக்கும் நம்முடைய முன்னோர்கள் அசையாது இருக்கும் நிலத்தில் போடப்படும் பணத்திற்கு கணக்கில்லாமல் போகலாம்?

முறையாக பதிவேடுகளை பராமரித்து விவசாயத்தை வெற்றி கரமாக கொண்டு வருவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தேனி மாவட்ட விவசாயிகளுக்கான மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு உத்திகள் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி



தேனி, ஜுலை 10

தமிழக அரசின் நிதியில், திருச்சி துவாக் குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் தலைமை இயக்குநர் பொறி. சி. பொதுப்பணித் திலகம் அனுமதியுடன், இணை இயக்குநரின் (பயிற்சி) தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படியும், இணைப்பேராசிரியர் பொறி.ஆ.வல்லத் தரசன், ஆலோசனையின்படியும், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் 'மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு உத்திகள் குறித்த பயிற்சி, பெரியகுளத்தில் அமைந்து உள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், அந்நிலையத்தின் தலைவர் முனைவர் எஸ்.சரஸ்வதி தலைமையில் 09.07.26 அன்று நடைபெற்றது.

பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் உதவிப் பேராசிரி யரும் பயிற்சி ஒருங்கிணைப்பாளருமான பொறி. கி. கிறிஸ்டல் கோரெட் அனைவரையும் வரவேற்றார். இணை ஆராய்ச்சி யாளர் அக்ரி. எம். உமாமகேஸ்வரி தொடக்க உரையாற்றினார்.

இப்பயிற்சியில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முனைவர் கே.ஆர். ராஜரெத்தினம், வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் மண் மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். உதவிப் பேராசிரியர் டி.லெனின் மண் பரிசோதனை மற்றும் மண்வளப் பாதுகாப்பில் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விவரித்தார். உதவிப் பேராசிரியர் எல்.ஸ்ரீமதி பிரியா நுண்ணீர்ப் பாசனத் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். உதவிப் பேராசிரியர் சி. சங்கர் தோட்டக்கலைப் பயிர்கள் அடர் நடவு முறையில் சிக்கன நீர் மேலாண்மை குறித்து எடுத்துரைத்தார். உதவிப் பேராசிரியர் டி. பிரபு, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பண்ணை களப்பார்வையில், அடர் நடவு முறையில் சிக்கன நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.

பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் பொறி.கி.கிறிஸ்டல் கோரெட், விவசாய நிலங்களில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாடுகள் குறித்தும் அரசு மானியங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும், பங்கேற்புச் சான்றிதழ், தொழில்நுட்ப விளக்கப் பிரசுரம் உள்ளிட்ட பயிற்சித் தொகுப்புகள் வழங்கப்பட்டன. நிறைவாக, பாசன மேலாண்மை பயிற்சி நிலைய இணை ஆராய்ச்சியாளர் அக்ரி எம்.உமாமகேஸ்வரி நன்றியுரையாற்றினார்.



# நவீன வேளாண்மையில் தென்னந்தோப்புகளில் மழை நீர் சேமிக்கும் வழிமுறைகள்

பணப்பயிர்களில் முக்கிய பயிர் தென்னை, கோடையைத் தாங்கி வளரும் குணமுடையது. உலக அளவில் தென்னை சாகுபடியில் முதலிடம் வகிப்பது இந்தோனேசியா, இரண்டாவது இந்தியா.

நெட்டை சரக தென்னை மரங்கள் ஒரு வருடம் 125 முதல் 150 காய்களும் குட்டை நெட்டை மற்றும் ஒட்டு ரகம் திருவையாறு 2 ரக தென்னை மரங்கள் 250 முதல் 400 இளநீர்கள் அல்லது தேங்காய்களைத் தருகிறது. குலைகுலையாய் இளநீரும் தேங்காய் களும் தரும் தென்னை மரங்கள் ஒரு நாளைக்கு 55 லிட்டர் முதல் 65 லிட்டர் வரை தண்ணீரை பூமியிலிருந்து எடுத்துக் கொள் வதாகக் கணக்கிடப்படுகிறது.

தென்னையின் வேர்கள் 150 அடிக்கு மேல் நீளமாக தண்ணீர் கிடைக்கும் இடம் தேடிச் செல்கிறது. ஒரு வீட்டில் தென்னை மரத்தின் வேர்கள் மூன்றாவது வீட்டுப் பத்துப் பாத்திரம் கழுவும் நீரை உறியச் செல்கிறது. அவர்கள் வீட்டுத் தென்னை மரத்து வேர்களும் இங்கு வந்து தண்ணீர் ஊறிஞ்சுகிறது.

தஞ்சாவூர் அருகில் உள்ள திருவையாற்றில் அமைந்துள்ள தென்னை ஆராய்ச்சி மையம் செய்த ஆராய்ச்சியில் மழை பெய்யும் போது தோப்பில் கிடைக்கும் தண்ணீர், நிலத்தடி நீர் மூலம் அல்லது வாய்க்கால் மூலம் பாய்ச்சும் தண்ணீர் வேகமாக ஆவியாகி சூரிய வெப்பத்தால் மேல் மண் சீக்கிரம் காய்ந்து வறண்டு கறையும். அதனால் அடிக்கடி தென்னந்தோப்புகளில் தண்ணீர் பாய்ச்ச வேண்டி உள்ளது. பூமியில் மேல் பரப்பில் சரியாக தண்ணீர் சேமிப்பு (ஈரம்) இருந்தால் தான் தென்னை மரங்கள் தேவையான நீரை எடுத்துக்கொள்கிறது என்பதை அத்தகைய தென்னை மரங்களின் பிஞ்சுகள் அதிகம் பிடித்து மகசூல் 50% அதிகரிக்கிறது என்பது தெரியவந்துள்ளது.

## மண் அரிப்பு தடுப்பு

தென்னந்தோப்பில் நான்கு ஓரங்களிலும் வரப்பு அமைக்க வேண்டும். தோப்புகளில் மேடு பள்ளம் பார்த்து குறுக்கு வரப்புகள் அமைக்க வேண்டும். மழை பெய்யும் போது விழும் மழை தண்ணீர் வழிந்து ஓடிவிடாமல் தடுக்க வேண்டும். மண் அரிப்பு தடுக்கப்பட்டு மண் வளம் பாதுகாக்கப்படுகிறது.

**மழைநீர் சேமிப்பு**

மேடு, பள்ளம் பார்த்து குறுக்கு நெடுக்குமாக வரப்பு அமைக்க வேண்டும். தண்ணீர் வழிந்து ஓடிவிடாமல் தடுக்க வேண்டும். எல்லா இடங்களிலும் பெய்கிற மழைநீர் தோப்பு முழுவதும் கசிவு ஏறும் தோப்பில் உள்ள தேவையில்லாத உப்புத்தன்மை குறையும். தொடர்ந்து போர்வெல் கிணறுகளில் ஊற்று பெருகி நீர் மட்டம் உயரும் தொடர்ந்து அதிக மழை பெய்தால் தோப்புக்குள் மழைநீர் சேமிப்பு குட்டை ஒன்று அமைத்து அதில் மீன் வளர்த்து உபரி வருவாய் கூட பெறலாம். மேலும் நிலத்தடி நீர் சேமிப்பு உயரும்.

**தென்னை சுற்றி மழைநீர் சேமிப்பு**

தென்னை மரங்களிலிருந்து 5 அடி வெளியில் தள்ளி நான்கு பக்கமும் அதாவது 10க்கு 10 சதுர அடி அளவில் தென்னையை சுற்றி வரப்பு அமைக்கவும் வேர்கள் அறுந்துவிடக்கூடாது. தென்னை மரங்களைச் சுத்தம் செய்து மேலுராகமாக கோகோஸ் வைக்கும் போது விழும் கழிவுகள் மட்டைகள் பன்னாடை மற்றும் வேறு மரங்களின் தழைகள் காய்ந்து விழும் சருகுகள் இவைகளை நெருப்பு வைத்துக் கொளுத்தி விடக்கூடாது. தென்னை மரங்களின் அடிபாகத்தை சுற்றி இரண்டு மூன்று அடுக்குகள் போடவும். கரையான் மருந்தை 10 பங்கு மணலில் கலந்து லேசாகத் தூவி கரையானை கட்டுப்படுத்த வேண்டும். வண்டல் மண், தொழு உரம் மூன்று கூடை அளவு தூவி விடவும். ஒரு மட்டை மக்கும் போது சுமார் 7 கிலோ எரு கிடைகிறது.

**மண்புழு பெருக்கம்**

பூமியில் வாழும் ஜீவராசிகள், மண் புழுக்கள் நுண்ணுயிரிகள் உண்டு வாழந்து பெருகும். மண் மக்கி உண்டாகி வளம் பெருகும். தென்னையை சுற்றி ஓலை மட்டை பரப்பிய இடத்தை 100 நாட்களுக்கு பிறகு சோதனை செய்து பார்த்த போது ஏராளமான புழுக்கள் தென்பட்டது. கழிவு மட்டை, மக்குகளை உண்பதற்கு மண்புழுக்கள் தென்னை மரங்களைச் சுற்றி குடி வந்துள்ளதை அறிய முடிகிறது. மண்புழு உரம் தென்பட்டது. ஒரு மண்புழு ஒரு நாளைக்கு சுமார் 52 முறை பூமிக்குள் தென்னை மரங்களைச் சுற்றி குடி வந்துள்ளதை அறிய முடிகிறது. மண்புழு உரம் தென்பட்டது. ஒரு மண்புழு ஒரு நாளைக்கு சுமார் 52 முறை பூமிக்குள் சுமார் ஒரு அடி ஆழம் வரை சென்று வருகிறது. நுண்ணயிரிகளின் பெருக்கமும் அதிகரித்து கண்டறிய முடிந்தது. காற்றில் கலந்துள்ள நைட்ராஜனை தாவர உணவாக்கி கொடுக்கும் தொழில்நுட்பம் நுண்ணுயிரிகளின் கிரியை என்று சொன்னால் மிகையாகாது.

காற்றில் 78% நைட்ராஜன் உள்ளது. இடி, மின்னல் ஏற்படும் போது உண்டாகும். வெப்பத்தால் தாக்கப்பட்டு நைட்ரஜன் + ஆக்ஸிஜன் கிரியை உண்டாகி நைட்ரிக் ஆக்ஸைடு ஆகிறது. மழை நீருடன் கலந்து நீர்த்த நைட்ரிக் அமிலாக மண்ணில் கலக்கிறது. நமக்குத் தெரியாமல் பூமியில் நடக்கும் நுண்ணுயிர் கிரியையாய் தழைச்சத்தாகி தென்னை மரங்கள் எடுக்கிறது.

மழை காலத்தில் மழை நீருடன் யூரியா (நைட்ரஜன்) கரைசல் கலந்து பூமியில் விழுவதால் புல் பூண்டுகள் பயிர்கள் அத்தனையம் பச்சை பசேலென காட்சி அளிப்பதன் ரகசியம் இதுவாகும்.

மழை பெய்யும் போது தென்னை மரதம் வழியாக தண்ணீர் வழிந்து இறங்கி அடிப் பகுதியில் மழைநீர் சேமிக்கப்படுகிறது. மட்டை, ஓலை, கழிவுகள் பரப்பி இருப்பதால் கொளுத்தும் வெயில் அனல் காற்றிலிருந்து வரும் வெப்பத்தை சருகுகள் தாங்குகிறது.

உஷ்ணம் ஊடுருவுவது தடுக்கப்பட்டு ஈரம் பாதுகாக்கப்படுகிறது. சூரிய வெப்பம் தாக்குதல் தடுக்கப்பட்டு பூமி குளிர்ச்சியுடன் இருக்கும். மழை நீருடன் கலந்து நைட்ரஜன் (தழைச்சத்து) நிலை நிறுத்தப்பட்டு தென்னை மர வேர்களால் உறிஞ்சப்படுகிறது.


**கழிகள்**

உரி மட்டை, உரி மட்டைத் தூள், உமி, மரத்தூள் இலை தழைகள் வாழை கரும்புச்சக்கை, சருகுகள் இவ்வாறு பயனில்லை என்று ஓரத்தில் ஒதுக்கும் கழிவுகள் அத்தனையும் தென்னை மரங்களைச் சுற்றிலும் இரண்டு அடுக்குகள் போட்டு, தென்னந்தோப்புகளில் மழை நீர் சேமிக்கப் பயன்படுத்தலாம். இதனால் சுற்றுப்புற சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

பெத்த பிள்ளை சோறு போடாவிட்டாலும் நட்ட பிள்ளை (தென்னம்பிள்ளை) சோறு போடும்.

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*




கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நானோ உர விழிப்புணர்வு விவசாயிகள் கருத்தரங்கம்

தஞ்சாவூர், ஜூலை 10

தஞ்சாவூர் மாவட்டம், பொன்னன்பூர் கிராமத்தில் நெல் சாகுபடி விவசாயிகளுக்காக நானோ உர விழிப்புணர்வு விவசாயிகள் கருத்தரங்கம் இப்கோ கள அதிகாரி மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், நெல் சாகுபடியில் நானோ உரங்களை சரியான முறையில் பயன்படுத்துவது, அதன் நன்மைகள் மற்றும் சமச்சீர் உரப்பயன்பாட்டின் (Balanced Fertilizer Usage) அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப் பட்டது. மேலும், e-Bazar பிரதிநிதிகள் பயிர்பாதுகாப்பு, பூச்சிக் கொல்லி மருந்துகளை சரியான முறையில் பயன் படுத்துவது மற்றும் பயனுள்ள பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்து நடைமுறை ஆலோசனைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சி, நவீன மற்றும் நிலையான வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, உள்ளூர் விவசாயிகளை திறன்படுத்தும் வகையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# விவசாயிகள் உயிர்மச்சான்று பெற விண்ணப்பிக்கலாம்!

புதுக்கோட்டை, ஜூலை 10

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகள் உயிர்மச்சான்று பெறுவதற்கான வழி முறைகளை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் ரெ.பிரகாஷ் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இயற்கை முறையில் பயிர் சாகுபடி செய்து விளைபொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்கு ஒன்றிய அரசின் தேசிய உயிர்ம வேளாண்மை திட்டத்தின் கீழ் உயிர்ம சான்று பெற நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் உயிர்ம சான்று பெற தனி நபராகவோ, குழுவாகவோ இந்த சான்று பெற பதிவு செய்யலாம். மேலும், வணிக நிறுவனங்களும், உயிர்மப் பொருட்களை பதப்படுத்து வோரும் இந்த சான்றிதழ் பெற விண்ணப்பிக்கலாம்.

**கட்டண விபரம் :** விவசாயிகள் விண்ணப்பிக்க 1a1 விண்ணப்ப படிவத்துடன் பண்ணையின் பொது விபரங்கள், வரைபடம், மண், பாசன நீர் பரிசோதனை விபரம், ஆண்டு பயிர் திட்டம், துறையுடனான ஒப்பந்த நகல்கள், நில ஆவணம், நிரந்தர கணக்கு எண் அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றின் கல்கள், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். தனி நபர், சிறு குறு விவசாயிகள் என்றால் ரூ.2,700, பிற விவசாயிகள் என்றால் ரூ.3,200, குழுப் பதிவு என்றால் ரூ.7,200 மற்றும் வணிக நிறுவனம் என்றால் ரூ.9,400 பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும் விபரங்களுக்கு மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.




# அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி



ஈரோடு, ஜூலை 10

விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் மூலமாக தரமான விதை உற்பத்தி குறித்து புத்தூட்ட பயிற்சி ஈரோடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை மூலம் நடத்தப்பட்டது.

ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இரா.சிவக்குமார், இப்பயிற்சிக்கு தலைமையேற்று பேசுகையில் ஈரோடு மாவட்டத்தில் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர்களுக்கும் தேவையான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இப்பயிற்சியை பயன்படுத்தி கொள்ள கேட்டுக்கொண்டார். பயிற்சியின் போது, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) சரவணன், உதவி விதை அலுவலர்கள் அனைவரும் விதைச்சான்று நடைமுறைகளை கடைபிடித்து தரமான விதை உற்பத்தியினை உறுதி செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் ஈரோடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் முனைவர் மா.சத்தியராஜ், விதை நேர்த்தி செய்தல், விதைப்பண்ணை பதிவு செய்தல், விதைப் பண்ணை பராமரிப்பு, பயிர் விலகு தூரம், கலவன்களை நீக்குதல், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலில் இருந்து விதைப் பயிரை பாதுகாத்தல், களைகளை நீக்கி தரமான விதை உற்பத்தி செய்வது உள்ளிட்ட தொழில்நுட்ப உத்திகள் குறித்து பயிற்சி அளித்தார்.

விதைச்சான்று அலுவலர் தமிழரசு, கணேசமூர்த்தி, அ.மாரிமுத்து, த.தனஜெயந்தி, சு.ஹரிபிரசாத், விதைச்சான்று நடைமுறைகளை பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள கணிணி மென்பொருள் SATHI- PORTAL–ல் மேற்கொள்வது பற்றி செயல் முறை விளக்கம் அளித்தனர்.

பயிற்சியில் விதைச்சான்று அலுவலர் (தொழில்நுட்பம்) மு.நாசர் அலி கலந்து கொண்டு உதவி விதை அலுவலர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். பயிற்சியில் ஈரோடு மாவட்ட அனைத்து வட்டாரங்களைச் சேர்ந்த உதவி விதை அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

# நடராஜபுரத்தில் நேரடி நெல் விதைப்பு குறித்த களப் பயிற்சி

திருச்சி, ஜூலை 10

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பங்கள் பற்றிய களப்பயிற்சி திருவெறும்பூர் வட்டாரம், நடராஜபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் சகிலா நெல்லில் நேரடி நெல் விதைப்புக்கு ஏற்ற புதிய இரகங்கள் மற்றும் அதன் சிறப்பியல்புகள் குறித்து விளக்கினார். மேலும், விதை நேர்த்தி வழிமுறைகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து எடுத்துரைத்தார். இணைப்பேராசிரியர் முனைவர் ராதிகா, நேரடி நெல் சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களான ஒருங்கிணைந்த களை மேலாண்மை, நீர் மேலாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மண் பரிசோதனை குறித்து விளக்கவுரை ஆற்றினார். மேலும், மண்வளம் பாதுகாப்போம் இயக்கத்தின் முக்கிய குறிக்கோளான சமச்சீர் உரப் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் திருவெறும்பூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சுகன்யா மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் தாவர பூச்சிக்கொல்லிகளின் பங்கு

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் தாவரப் பூச்சிக்கொல்லிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை இயற்கை வழிகளில் தயாரிக்கப்படும் மருந்துகளாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானவையாகவும் அறியப்படுகின்றன.




## தாவரப் பூச்சிக்கொல்லிகளின் அறிமுகம்

தாவரப் பூச்சிக்கொல்லிகள் என்பவை வேம்பு, துளசி, ஆடாதொடை, நொச்சி, அகத்தி, பூண்டு, மிளகாய் போன்ற தாவரங்களிலிருந்து திரட்டப்படும் பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. இவை பூச்சிகளை விரட்டியடிப்பதோடு அவற்றின் வளர்ச்சியையும் தடுக்கின்றன. ரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் போல இவை மண், நீர், காற்றைப் பாதிக்காமல் பயிர்களைப் பாதுகாக்கின்றன. இவற்றின் பயன்பாடு இயற்கை வேளாண்மையில் முக்கியமானது. பயிர்களின் சேதத்தைத் தடுத்து, உணவு பாதுகாப்பை உறுதி செய்கின்றன.

## நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

தாவரப் பூச்சிக்கொல்லிகள் நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காது, அதனால் இயற்கை சமநிலையைப் பராமரிக்கின்றன. ரசாயன மருந்துகள் 99% சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன என்று கூறப்படுகிறது. இவை உணவுச் சங்கிலியில் நச்சுத் தன்மையை ஏற்படுத்துவதில்லை. விவசாயிகள் இவற்றை எளிதாக தயாரித்து பயன்படுத்தலாம். நீண்டகாலப் பயன்பாட்டில் பூச்சிகள் எதிர்ப்பு திறனும் பெறுவதில்லை.

## பிரபலமான தாவரப் பூச்சிக்கொல்லிகள்

வேம்பு கொட்டைக் கரைசல் கம்பளிப்புழு, அசுவினி, தத்துப்பூச்சி, இலைச்சுருட்டுப்புழு போன்றவற்றை கட்டுப்படுத்தும். துளசி, பூண்டு, மிளகாய் சாறு பயிர்களை உண்ணும் பூச்சிகளை விரட்டுகிறது. நொச்சி, அகத்தி தாவரங்கள் துகள் வடிவில் பயன்படுத்தப்படுகின்றன. இவை பசை அல்லது சாறு வடிவிலும் கிடைக்கின்றன.

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



## தயாரிப்பு முறைகள்

வேம்பு எண்ணெயை சோப்பு நீருடன் கலந்து தெளிக்கலாம். 50 கிராம் வேம்பு இலைகளை 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி பயன்படுத்தவும். பூண்டு 50 கிராம், மிளகாய் 25 கிராம், தண்ணீர் 1 லிட்டரில் 24 மணி நனைத்து தெளிக்கலாம். இவற்றை காலை அல்லது மாலை நேரத்தில் தெளிப்பது சிறந்தது. 10-15 நாட்களுக்கு ஒரு முறை திரும்பத் தெளிக்கவும். வீட்டுத் தாவரங்களுக்கும் இவை பயன்படுத்தலாம். இயற்கையானவை என்பதால் பாதுகாப்பானவை.

## குறிப்பிட்ட பயிர்களில் பயன்பாடு

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை வேறுபடுத்தி பார்த்து மருந்து தேர்ந்தெடுக்கவும். உதாரணமாக, சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு வேம்பு சிறந்தது. மரப்பயிர்களில் ஆடாதொடை, நொச்சி பயன்படுத்தப்படுகின்றன. தோட்டப் பயிர்களில் உயிரியல் முறையுடன் இணைத்து பயன்படுத்தினால் சிறந்த பலன். பூஞ்சை, பாக்டீரியா கொல்லிகளுடன் கூடுதல் பாதுகாப்பு.

## சவால்கள் மற்றும் தீர்வுகள்

ரசாயன மருந்துகளுக்கு மாற்றாக இவை பயன்படுத்தப் பட்டாலும், சரியான அளவு கவனிக்க வேண்டும். அதிக அளவு பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கலாம். விவசாயிகள் பயிற்சி பெறுவது அவசியம். இயற்கை வேளாண்மைக்கு ஏற்றவாறு உயிரியல் கொல்லிகளுடன் இணைப்பது சிறந்தது. அங்கக வேளாண்மை கொள்கையின்படி பொருளாதார சேத நிலையைத் தடுக்கவும்.

## எதிர்கால முக்கியத்துவம்

தாவரப் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. 2025ல் விவசாய சவால்களுக்கு இயற்கை தீர்வாக அறியப்படு கின்றன. நீலம்மாற்று விவசாயத்தை ஊக்குவிக்கின்றன. இவை பயன்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் சாத்தியமாகின்றன.

தகவல் : ***மதுரஞ்சனா.ஜெ, முனிசா.மா, பசுபதி.இ., கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை - 625 532.***

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW

isha

POWERGRID

BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**